பக்கங்கள்: 13

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 15 திங்கட்கிழமை 29.01.2024 கதிர் 83

# அனுரகுமார ஜனாதிபதியானால் அன்றே நாடாளுமன்றம் கலைப்பு

## வசந்த சமரசிங்க தெரிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றால் அன்றைய தினம் இரவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய பொதுத் தேர்தல் அறிவிக்கப்படும் என்று ஜேவிபியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபதி தேர்தலை கட்டாயம் 2024 ஒக்டோபர் 17 அல்லது அதற்கு முன்னர் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் எதிர்காலம் திரிசங்கு சொர்க்கத்துக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. கட்சிக்கு இப்போது இரண்டு தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், யார் உத்தியோகபூர்வ தலைவர் என்று தெரியாது. ஒத்திவைக்கப்பட்ட தேசிய மாநாடும் புதிய தலைவர் பதவியேற்பும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் எவையும் இல்லை.

அதுவரைக்கும் குழப்பங்களை ஏற்படுத்தும் தரப்புக்களைச் சமாளித்து சமரசப் பேச்சுக்களை நடத்தும் முயற்சிகளில் புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவரான சிறீதரனை ஈடுபடுமாறும், தனது இரண்டாவது மகனின் திருமணத்திற்காக சிங்கப்பூருக்குச் செல்லும் தான் பெப்ரவரி 10 ☞ 2

# கரிநாள் பேரணியில் பங்கேற்க அழைப்பு

## கடைகளை அடைக்கவும் கோரிக்கை

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 தமிழர்களுக்கான கரிநாள் என்று அறிவித்திருக்கும் கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அன்றைய தினம் நடத்தப்படவுள்ள கரிநாள் பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் கடைகளை அடைத்து ஆதரவு வழங்குமாறும் ☞ 2

# போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் 'யுக்திய' மூலம் கைது செய்வது அவசியம்

## ஆசிய மனித உரிமைகள் குழு வலியுறுத்து

போதைப்பொருள் பாவனையாளர்களை மட்டுமல்ல, போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் கைது செய்ய வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் குழுவின் தலைவர் திமுத்து பாலசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யுக்திய சுற்றிவளைப்பினை நாம் வரவேற்கின்றோம். யுக்திய சுற்றிவளைப்பானது நமது அன்றாட உழைப்பினை உறுஞ்சுவதாகவே உள்ளது. போதைப்பொருள் பாவனையாளர்களை மட்டுமல்ல, போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் கைது செய்ய வேண்டும்.

அருகில் உள்ள வீட்டில் போதைப்பொளைக் கொள்வனவு செய்வதற்காக பாத்திரங்களை திருடி விற்பனை செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களுக்கு பிணை அனுமதி வழங்கப்படுகின்றது.

போதைப்பொருள் விநியோகம் எங்கிருந்து எவ்வாறு இடம்பெறுகின்றது என்பது அறியப்படாத வரையில் பிரச்சினைகள் நீடித்துக்கொண்டுதான் இருக்கும். ஆகவே இந்த விடயத்தில் ☞ 2

# காங்கேசன் – நாகப்பட்டினம் இடையே மீள கப்பல் சேவை

## பெப். 15 தொடங்கும்

இந்தியா-இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவையை பெப்ரவரி 15ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் காங்சேன்துறையிலிருந்து தமிழ்நாட்டின் நாகப்பட்டிணம் வரை இந்தக் கப்பல் சேவை இடம்பெற்றுவருகின்றது.

இலங்கை - இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்து என்பதோடு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் நிறுத்தப்பட்ட பயணிகள் கப்பல் சேவை 4 தசாப்தங்களாகத் தடைப்பட்டிருந்தது.

நான்கு தசாப்தங்களின் பின்னர் ☞ 2

# காலியின் அபிவிருத்திக்கு தனியான ஆணைக்குழு

## ஜனாதிபதி தீர்மானம்

காலியின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காக விசேட ஆணைக்குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

காலி அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று கண்காணிப்புப் பயணத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலி நகரம் மற்றும் காலி கோட்டை பிரதேசங்களுக்குச் சென்று அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

காலி கோட்டையில் அமைந்துள்ள அரச நிறுவனங்களையும் அலுவலகங்களையும் காலி கோட்டைக்கு வெளியே கொண்டுவருவதற்கான செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெற்று வருவது தொடர்பில் கவனம் செலுத்திய ☞ 2

# சனத் நிஷாந்தவின் உடல் நேற்று மாலை நல்லடக்கம்

## கண்ணீரோடு விடைகொடுத்தனர் மக்கள்

விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தாவின் பூதவுடல் நேற்று புத்தளம் ரஜகடலுவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் சனத் நிஷாந்தவும் அவரது மெய்ப் பாதுகாவலரும் உயிரிழந்திருந்தனர். அமைச்சரின் இறுதிக் கிரியைகள் பிற்பகல் 1 மணி முதல் ஆராச்சிக்கட்டுவவில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு பெருந்திரளான மக்களின் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். ☞ 8

# 2024 ஏ.எல். மாணவருக்கான புலமைப் பரிசில் அதிகரிப்பு

2021 (2022)ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றி ஒரே தடவையில் சித்தியடைந்து 2024ஆம் ஆண்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் கொடுப்பனவை 2024 பெப்ரவரி மாதம் முதல் ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில் ஜனாதிபதி ரணில் விகரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும், கற்கும் திறன் கொண்ட, ஆனால் பொருளாதாரச் சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான ☞ 2

# கிரிக்கெட் தடை நீக்கம்

இலங்கை கிரிக்கெட் மீது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விதித்திரு;த தடை நீக்கப்பட்டிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார் நேற்று அறிவித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி படுதோல்வி அடைந்ததை அடுத்து ஏற்பட்ட ☞ 8

# மகிந்த தேசியவாதத்தை உணர்வோடு ஏற்றவரல்லர்

## கோட்டாவின் சகாவான வர்த்தகர் திலித் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தேசியவாதத்தை உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டவரல்லர் என்று மௌபிம ஜனதா கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் நெருங்கி சகாவுமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற மௌபிம ஜனதா கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவின் குரக்கன் சால்வை தேசியவாத சித்தாந்தத்தை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அவர் அந்த தேசியவாத சித்தாந்தத்தை உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டவர் அல்லர்.

ஒப்பீட்டளவில் எமது தேசியத்திற்கு மிகப் பெரிய சேவையை செய்த நபராக மகிந்த ☞ 2

# மேற்கத்தைய உடைகள் அணிந்த ரணில் ராஜபக்ச கொள்கைவாதி

## முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் சாடல்

மேற்கத்தேய உடையணிந்த ராஜபக்சக்களின் கொள்கைவாதியாகவே இன்றைய ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார்.

இங்கிலாந்தில் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் அது தொடர்பில் 4 ஆண்டுகள் ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இலங்கையில் உயர்நீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்ட 13 பரிந்துரைகளைக் கூட கவனத்தில் கொள்ளாமல் குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

இந்த ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கான ஆண்டாகும். மக்கள் தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஒக்டோபரில் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். மக்கள் ஆணையின்றியே தாம் ஆட்சியை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அளவில் திரும்பி வந்த பின்னர் அந்த முயற்சியில் சிறீதரனுடன் இணைந்து கொள்வார் என்றும் மாவை சோ சேனாதிராசா தெரிவித்திருக்கின்றார். இதனால் இன்னும் இரண்டு வாரங்களுக்குக் கட்சிக்குத் தலைவரும் கிடையாது செயலாளரும் கிடையாது.

திருகோணமலையில் சனிக்கிழமை நடந்த கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து, பதவி விலகிச் செல்லும் தலைவர் மாவை சேனாதிராசா வீட்டில் புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அந்தச் சந்திப்பில் எதிர்ப்புக்கள் காணப்படுவதால் கட்சியின் நிர்வாகத் தெரிவை மீண்டும் நடத்துவதே பொருத்தமாக இருக்கும் என்கிற சாரப்பட சேனாதிராசா கருத்துத் தெரிவித்துள்ளார். சிறீதரனும் அதனை ஆமோதித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார். அதாவது சனிக்கிழமை நடந்த மத்திய செயற்குழுக் கூட்டத்திலும் பின்னர் பொதுக்குழுவிலும் எடுக்கப்பட்ட முடிவுகளை, மத்திய செயற்குழுவை மீண்டும் கூட்டி மீளாய்வு செய்யவேண்டும், அதிருப்தியாளர்களின் கரிசனைகள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்று இருவரும் வலியுறுத்தியுள்ளார்.

எந்தச் செயற்குழுவைக் கூட்டி மீள்பரிசீலனை செய்யப்போகிறீர்கள் என்று சுமந்திரன் கேட்டதற்கு, பழைய செயற்குழுவைத்தான் என்று இருவரும் பதிலளித்துள்ளனர். கட்சியின் யாப்புப்படி பழைய மத்திய செயற்குழுவின் பதவிக் காலம் கடந்த பொதுக் குழுக் கூட்டத்துடன் முடிந்துவிட்டது. இனி புதிய மத்திய செயற்குழுவைத்தான் கூட்ட முடியும் என்று சுமந்திரன் விளக்கியுள்ளார். அதற்கு, யாப்புப்படி என்று நீங்கள் பிடிவாதமாக நிற்காமல், கட்சியை ஒன்றிணைத்துச் செல்வதற்கான வழிவகைகளைத்தான் பார்க்கவேண்டும் என்கிற வகையில் மற்றைய இருவரும் பதிலளித்துள்ளனர்.

அதுதான் முக்கியம் என்று யாப்புப்படி நடப்பதில்லை என்று நீங்கள் தீர்மானித்தால் அதற்கு நான் என்ன செய்யமுடியும் என்று கேள்வி எழுப்பிய சுமந்திரன் சனிக்கிழமை நடந்த செயற்குழுக் கூட்டத்திலும் பொதுக் குழுவிலும் எடுக்கப்பட்ட முடிவுகள் மாற்றுவதைத் தான் ஏற்கமாட்டார் என்றும் தெரிவித்துவிட்டு சுமந்திரன் கூட்டத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார் என்று தெரிகின்றது.

எந்த இணக்கப்பாடுகளும் எட்டப்படாத நிலையில், மாவையர் நாடு திரும்பும் வரையில் இந்தப் பிரச்சினையை ஆறப்போடுவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சனிக்கிழமை கூட்டத்தில் செயலாளர் தெரிவு பிரச்சினை என்று வெளியே சொல்லப்பட்டாலும் உண்மையான பிரச்சினை அதுவல்ல என்றும் கட்சியின் மத்திய செயற்குழுவில் சுமந்திரனின் ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் இடம்பெற்றிருப்பதே சிறீதரன் அணியினரின் எதிர்ப்புக்கும் கிளர்ச்சிக்கும் காரணம் என்று கட்சி உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன. தாங்கள் கடும் பிரயத்தனப்பட்டு பல்வேறு வழிகளைக் கையாண்டு சிறீதரனைத் தலைவராகிவிட மத்திய செயற்குழு சுமந்திரனின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டால் என்ன செய்வது என்கிற பதற்றமே தற்போதைய குழப்பங்களுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

அதனாலேயே மத்திய செயற்குழுவில் செயலாளராக திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் குகதாசனைத் தெரிவு செய்வதற்கு இணங்கியவர்கள் பின்னர் அந்தத் தெரிவை ஏற்க முடியாது என்று கூறி பொதுச் சபையில் குழப்பங்களை ஏற்படுத்தினர் என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதனாலேயே, செயற்குழுவில் சுமந்திரனோடு இணங்கி புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்த புதிய தலைவரும்கூட இப்போது, மீண்டும் செயற்குழுவைக் கூட்டி தெரிவுகளை மீண்டும் ஒரு தடவை நடத்தலாம் என்கிற முடிவுக்குத் திரும்பியிருக்கிறார் போன்று தெரிகின்றது.

எது எப்படியிருந்தாலும் முடிவை மாற்றவில்லை என்றால் ஒரு தரப்பினர் கும்புவார்கள் முடிவை மாற்றினால் மற்றொரு தரப்பினர் குழம்புவார்கள். ஆக மொத்தத்தில் ஒற்றுமை ஒற்றுமை என்று பேசப்போய் ஒன்றுமில்லாமல் போனதுதான் மிச்சம் போலுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அனுரகுமார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடக்க வேண்டும். அதனை எவராலும் ஒத்திவைக்க முடியாது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க என்பது ஏகமனதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. வேறு நபர்கள் பல்வேறு கதைகளை கூறினாலும் அவை செல்லுப்படியற்றவை.

அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்யும் அன்றைய நாள் இரவிலேயே தற்போதைய பாராளுமன்ற கலைக்கப்பட்டு, புதிய பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்படும் எனவும் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## 2024 ஏ.எல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப்பரிசில் வழுங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், 2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022/2023 ஆண்டு தொடர்பாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ரூ. 6000 தொகையை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன்படி, இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதொடர்பான புதுப்பிக்கப்படும் தகவல்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்வதற்கு , ஜனாதிபதி நிதியத்தின் www.facebook.com/president.fund என்ற உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை மற்றும் உத்தியோகபூர்வ YouTube சேனலான www.youtube.com/ShPresidentsFund I like/follow அல்லது subscribe செய்யுமாறும் www.presidentsfund.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

## காலியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி, அபிவிருத்தி பணிகளைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

காலி நகரத் திட்டத்தை அமுல்படுத்துவதில் நகர அபிவிருத்தி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களும் ஒரே நிறுவனக் கட்டமைப்பின் கீழ் செயற்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இப்பகுதி சுற்றுலாத்துறை ஊக்குவிப்பிற்கான திட்டங்களை துரிதப்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

காலி கோட்டைக்குச் சென்ற ஜனாதிபதி, அங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் கலந்துரையாடினார். அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார். அருகில் உள்ள கடைக்குச் சென்று கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, காலி கோட்டையின் அபிவிருத்தி தொடர்பில் அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

இதேவேளை, காலி கோட்டையை அண்மித்த பகுதியில் நேற்று நடைபெற்ற 2024 காலி இலக்கிய விழாவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கலந்துகொண்டார்.

உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், வெளியீட்டாளர்கள் ஒன்றிணையும் சர்வதேச இலக்கிய விழாவான காலி இலக்கிய விழா பல வருடங்களுக்குப் பின்னர் இவ்வருடம் மீண்டும் நடைபெறுவது விசேட அம்சமாகும்.

இரண்டாவது நாளான நேற்று, செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், விரிவுரைகள் உள்ளிட்ட பல செயற்பாடுகள் இடம்பெற்றதுடன், இதில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலக்கியவாதிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அங்குள்ள புத்தகக் கூடங்களுக்கு சென்ற ஜனாதிபதி புத்தகங்களைப் பார்வையிட்டார்.

சர்வதேச கலை, இலக்கிய அனுபவங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கும் இலங்கையின் இலக்கியத்துறையை உலகிற்கு எடுத்துச் செல்வதற்கும் சிறந்த வாய்ப்பை வழங்கும் காலி இலக்கிய விழா காரணமாக ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தற்பொழுது காலி மற்றும் கொக்கல பகுதிகளுக்கு வருகை தந்துள்ளனர்.

ஜனவரி 25ஆம் திகதி ஆரம்பமான காலி இலக்கிய விழா நேற்றுடன் நிறைவடைகிறது. அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, மனுஷ நாணயக்கார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன ஆகியோரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

## மகிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சவரலாற்றில் இடம்பெறுவார். அவர் தேசிய அடையாளங்கள் தொடர்பில் அறிந்தோ அறியாமலோ செயற்பட்டிருந்தாலும் ராஜபக்சவினருக்கு குறைந்தளவில் கூட தேசிய உணர்வு இருக்கவில்லை. அவர்கள் தேசியவாத உணர்வை தமது இலாபத்திற்காகவே பயன்படுத்தினர்.

குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ச, தேசியம் மற்றும் நாகரிக கருத்தியலுக்கு எதிராக பக்கத்தில் இருக்கின்றார். இலங்கைக்கே உரிய நாகரிகம் இருக்கின்றது. அந்த நாகரிகம் எமது வாழ்வியல் முறை என்பதை எந்த விதத்திலும் அவர் நம்பமாட்டார். இந்த தவறை நாம் திருத்திக்கொள்ள வேண்டும்.

இதனால், எம்மால் முடிந்தளவில் ஒரு சந்தர்ப்பத்தில் கோட்டாபய ராஜபக்சவை தேசியவாத சித்தாந்தத்திற்குள் கொண்டு வந்து, அதனுடனாக தேசியத்தை வலுப்படுத்த முயற்சித்தோம். எனினும் அவர் பதவிக்கு வந்த பின்னர் அவரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரும் மோதிக்கொண்டனர்.

இதனால், தேசியவாதத்தின் முகாமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தொடர்ந்தும் கருதக்கூடாது எனவும் திலித் ஜயவீர மேலும் தெரிவித்துள்ளார்.

## கரிநாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தினை வடக்கு, கிழக்கில் கரிநாளாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கரிநாளை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கங்கள் ஒன்றிணைந்து பெப். 4 மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் இருந்து காந்திபூங்கா வரை அமைதிப் பேரணி நடத்தவுள்ளது.

75 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு சுதந்திரம் பகிரப்படவில்லை. மாறாக, ஆட்கடத்தல், படுகொலைகள், நில அபகரிப்பு, வரலாற்று திரிவுபடுத்தல், ஊடக ஒடுக்குமுறை போன்ற பல்வேறு ஒடுக்குமுறைகள் தொடர்ச்சியாக தமிழர்களிடம் திணிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, அந்த கரிநாளில் வர்த்தக நிலையங்களை பூட்டி, எமது அமைதிப் பேரணிக்கு ஆதரவு வழங்குமாறும், மீன்பிடி சங்கங்களும் அனைத்து தொழிற்சங்கங்களும் மூவின மக்களும் கலந்துகொண்டு எமக்கு ஆதரவு வழங்குமாறும் அன்புடன் அழைப்பு விடுக்கின்றோம் என்றனர்.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிசனைகள் தேவையாக உள்ளன என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் பாலியல் துஷ்பிரயோகத்தினால் 167 சிறுமிகள் கடந்த ஆண்டு கருத்தரிப்பு

## பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுதந்தர தகவல்

நாட்டில் கடந்த ஆண்டு பாலியல் துன்புறுத்தல் உள்ளடங்கலாக சிறுவர்களுக்கெதிராக 5000 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 4000இற்கும் மேற்பட்ட குற்றச் செயல்கள் பாலியல் துன்புறுத்தல்களுடன் தொடர்புடையவையாகும் என பொலிஸ் தலைமையகத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுதந்தர தெரிவித்தார்.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களில் 167 சிறுமிகள் கர்ப்பந்தரித்துள்ளனர் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுதந்தர சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

2023ஆம் ஆண்டில் சிறுவர்களைக் கொலை செய்தல், கொலை முயற்சி, காயப்படுத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல் உள்ளிட்ட 3074 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. இவை தவிர பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட 1463 சிறு குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறு பாலியல் துன்புறுத்தல் உள்ளடங்கலாக கடந்த ஆண்டு சுமார் 5000 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன.

ஏனைய குற்றச் செயல்கள் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் பாரியளவில் அதிகரிக்காத போதிலும், பாலியல் குற்றச் செயல்கள் அதிகரித்த போக்கினையே காண்பிக்கின்றன.

அதற்கமைய 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கெதிரான 1502 பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களுக்கெதிரான 584 பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பில் 70 குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களின்போது 167 சிறுமிகள் கருத்தரித்துள்ளனர். இவர்களில் 127 பேர் தமது காதலர்களால் இந்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைக்கு உள்ளாகும் பெரும்பாலான சிறுமிகளின் குடும்ப பின்னணி இதில் பாரியளவில் தாக்கம் செலுத்துகின்றது.

சில சந்தர்ப்பங்களில் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் காதல் உறவைப் பேணுவதற்கு அவர்களது பெற்றோரால் எவ்வித எதிர்ப்புக்களும் வெளியிடப்படாமையும் இனங் காணப்பட்டுள்ளது.

பெற்றோர்களுக்கிடையிலான பிளவுகளும் சிறுவர்கள் இவ்வாறு தவறான வழிகளில் செல்வதில் தாக்கம் செலுத்துகின்றது. தற்போது பொலிஸ் திணைக்களத்தின் கீழுள்ள 607 பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் 605 பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு காணப்படுகிறது. இவை தவிர தேசிய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவினால் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய அப்பிரிவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து சிறுவர்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் தொடர்பான தகவல்களை வழங்க முடியும். இதன் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களின் இரகசியத்தன்மை நிச்சயம் பேணப்படும்.

அதே போன்று தகவல் வழங்குபவர்களின் தனித்துவத்தன்மையும் பாதுகாக்கப்படும். எனவே, தமது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் கூற முடியாத, பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடளிக்க முடியாத சிறுவர்கள் இந்த அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தமது பிரச்சினைகளை தெரிவிக்க முடியும். - என்றார்.

(05)

# பயங்கரவாத சட்டம், நிகழ்நிலை காப்பு சட்டம் இரண்டும் உடன் மீளப்பெறப்படுதல் வேண்டும்

## கருணாகரன் எம்.பி. கோரிக்கை



இலங்கை நாடாளுமன்றத்தில் மக்களை அடக்கி ஒடுக்கும் சட்டங்கள் தான் கொண்டு வரப்படுகின்றன. 1979ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் இன்று ஒட்டுமொத்த இலங்கை மக்களுமே இந்த சட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்டு, இதன் வலியை உணர்ந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே, இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஊடகங்களை அடக்கும் நிகழ்நிலை காப்புச்சட்டம் மீளப்பெறப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கறுப்பு ஜனவரியை முன்னிட்டு ஊடக அடக்குமுறையை எதிர்த்து, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

1979 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக 6 மாதத்துக்கு தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத சட்டம் இன்று வரை தொடர்ச்சியாக இருக்கின்றது. இந்த நிலையில் ஊடகங்களையும் மக்களின் கருத்து சுதந்திரத்தையும் அடக்குவதற்காக இந்த நிகழ்நிலை காப்பு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்துக்கு வடக்கு, கிழக்கு சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட கை உயர்த்தி ஆதரவு கொடுத்திருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்காகத் தான் இச்சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றனவோ என சந்தேகங்கள் எழுகின்றன. ஏனென்றால், கூடுதலான ஆர்ப்பாட்டங்கள் நில அபகரிப்புகள், காணாமலாக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான ஆர்ப்பாட்டங்கள் வடக்கு கிழக்கில் அதிகமாக இடம்பெறுகின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதற்கு பின் ஒரு மௌன யுத்தம் வடக்கு கிழக்கை பௌத்த மதமாக்குவது, காணி அபகரிப்புக்கு பெரும்பான்மையான மக்களை குடியேற்றி எமது இன பரம்பலைக் குறைப்பதுமான ஒரு நிகழ்ச்சி நிரலில் அரசும் அரச அதிகாரிகளும் புத்த பிக்குகள் கூட உள்வாங்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

இப்படியான காலகட்டங்களில் வடக்கு, கிழக்கிலே மக்கள் கிளர்ந்து எழக்கூடாது என்பதற்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இந்நாட்டின் அரகலய போராட்டம் என்ற போராட்டங்கள் கூட இனி ஏற்படக் கூடாது எனவும் அரசுக்கு எதிராக மக்கள் கருத்து கூறக்கூடாது என்றும் அரசு நினைக்கிறது. ஒன்றை மட்டும் இந்த அரசு உணர்ந்துகொள்ள வேண்டும். இன்றிருக்கும் அரசு நாளை மாறலாம். நாளை மாறும்போது தனக்கு சாதகமாக தற்போது இருக்கும் அரசு அங்கத்துவம் பெறுபவர்கள் கூட இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படலாம்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் கை உயர்த்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்கள் கூட இன்னொரு ஆட்சி மாற்றம் ஏற்படும்போது இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படலாம் என்பதை உணராமல், அவர்கள் இந்த சட்டத்துக்கு ஆதரவு கொடுத்திருக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்ட, கொல்லப்பட்ட, ஊடக கலையகங்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன. முப்பது நாற்பதுக்கு மேற்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். யாருக்குமே இன்று வரை நீதி கிடைக்கவில்லை. நீதி கிடைக்கும் என்று கூட எதிர்பார்க்க முடியாது.

2009 தனது குடும்ப உறுப்பினர்களை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவினர்கள் கூட இன்னும் எங்கு இருக்கின்றார்கள் என்று தெரியாமல் மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான நீதியை கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நீதியைக் கூட கொடுக்காத அரசு இப்படியானவர்களுக்கு நீதி கொடுக்குமா என்பது சந்தேகம்தான்.

இருந்தாலும் இன்னும் ஒரு கருத்தும் இருக்கிறது. ஊடகங்களை ஒழுங்குபடுத்தக்கூடிய ஒரு தேவையும் இருக்கிறது. தற்போது ஊடகங்களுக்கு அப்பால் சமூக வலைத்தளங்கள் ஊடாக சில பாதிப்புகளும் மக்களுக்கு ஏற்படுகிறது. குறிப்பாக சிலர் தற்கொலை செய்யுமளவுக்கு போலி முகநூல் மூலமாக சில பிரசாரங்கள் செய்யப்படுவதால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது.

இருந்தபோதும் அதை விடுத்து ஊடகங்களை அடக்கி, தனக்கு எதிரான கருத்துக்களை யாருமே கூறக்கூடாது என்றொரு நிலையில் தான் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் வருகிறது என்பதை நாங்கள் எல்லோரும் நன்றாக உணர்ந்துகொண்டிருக்கின்றோம். இதனை அரசாங்கம் மீளப்பெற வேண்டும்.

இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு எதிராக 56 அமைப்புகள் குரல் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, சர்வதேசத்தின் கவனம் இலங்கை அரசு மீது திரும்பி இருக்கின்றது. ஏற்கனவே பயங்கரவாதத் தடை சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று சர்வதேசம் கூறுகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு சிந்திக்கிறது. எங்களை பொருத்தமட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் வேண்டாம்; பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வேண்டாம்; ஊடகங்களை அடக்கும் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமும் வேண்டாம் என்பதே எங்களுடைய உறுதியான நிலைப்பாடு. - என்றார். (05)

# கிராம உத்தியோகத்தர் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன

டிசெம்பர் 2, 2023 அன்று நடைபெற்ற கிராம உத்தியோகத்தர் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சை திணைக்களம் வழங்கிய பிரதேச செயலகப் பிரிவுகளின்படி நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற 4232 பேரின் பட்டியல் சனிக்கிழமை வெளியிடப்பட்டதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் 2002 கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளதாகவும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு அரசசேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார். (05)

# போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் குறித்த தகவல்களுக்கு அவசர தொலைபேசி இலக்கம்




போதைப்பொருள் மற்றும் அபாயகரமான போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்தல், புனர்வாழ்வளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கல் உள்ளிட்ட சேவைகளுக்காக அபாயகரமான மற்றும் வித்தன்மையுடைய போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கான செயலணியால் அவசர தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை அபாயகரமான மற்றும் வித்தன்மையுடைய போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கான செயலணியின் தலைவராக செயற்படும் கடற்படை தளபதி வைஸ் அத்மிரல் பிரியந்த பெரேரா தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் 1927 என்ற குறித்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கடற்படை தளபதி மேலும் தெரிவிக்கையில் -

வித்தன்மையுடைய மற்றும் அபாயகரமான போதைப்பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வருதல் மற்றும் அவை விற்பனை செய்யப்படுதல் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும், போதைப்பொருள் பாவணையை தடுப்பதற்காகவும், அதற்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பதற்கு இந்த செயலணி நிறுவப்பட்டது.

11 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்கள் இந்த செயலணியில் அங்கத்தவர்களாக உள்ளன. அதற்கமைய போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தொடர்பில் இந்த இலக்கத்துக்கு தகவல்களை வழங்கமுடியும். இவ்வாறு தகவல் வழங்குபவர்களின் தனித்துவத்தன்மை பாதுகாக்கப்படும். -என்றார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் சுதந்திரமும் தமிழர்களின் அரசியலும்

இன்னும் சில நாள்களில் இலங்கையின் சுதந்திர தினம் வரப்போகிறது. அதனை வழக்கம்போல் காலிமுகத்திடலில் அணிவகுப்பு மரியாதைகளுடன் கொண்டா–டுவதில் சிங்களத் தரப்பினரும் அந்த நாளை கரிநாளாக அறிவித்து துக்கத்தைக் கடைப்பிடிப்பதில் தமிழர் தரப்பும் மும்முரமாகிவிட்டன.

ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவராகப் பதவியேற்ற பின்னர் வரும் இரண்டாவது சுதந்திர தினம் இது. முதலாவது சுதந்திர தினத்தின்போது, அந்த நாளுக்கு முன்னதாக தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஆரவார அறிவிப்புக்களை எல்லாம் வி–டுத்தார் ரணில். அதற்கான எந்தவொரு உளப்பூர்வமான முயற்சிகளையும்அவர்எடுக்கவில்லைஎன்கிறபோதும் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து ஓரிரு கூட்டங்களை இது தொடர்பில் நடத்தினார்.

ஆனால், கடந்த ஒரு வருட காலத்தில் அந்த நிலை முற்றிலும் மாறி தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசுவதிலிருந்து தென்னிலங்கை அரசியல் வெகுதூரம் நகர்ந்துவிட்டது. அதிலும் ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த ஒரு வருட கால நிலைமாற்றம் என்பது தலைகீழானதாக அமைந்திருக்கிறது. முதலில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்று தொடங்கிய அவர், பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போகிறார் என்று ஆர்ப்பரித்தார்.

அரசமைப்பில் ஏற்கனவே உள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக அப்படியே நடைமுறைப்படுத்துவதற்கு அரசுத் தலைவரான அவருக்குள்ள அதிகாரங்களே போதுமானவை. அப்படியிருந்தும் கொடி குடை ஆலவட்டங்களுடன் பரபரப்பாக்கி, பிக்குகளிடமிருந்து அதற்கு கடும் எதிர்ப்புக்களை வரவைத்து பின்னர் பிரச்சினை இழுத்து மூடிவிட்டார் ரணில் விக்கிரமசிங்கவை. இப்போது அவரை அந்த இடத்திலிருந்து நகர்த்தி தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத் தரும் வல்லமை தமிழ்த் தலைவர்களுக்கும் இல்லாத காரணத்தால் அரசுத் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டாவது சுதந்திர தினத்திலேயே தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு கிடப்பில் போடப்பட்டுவிடடது.

அதுவும் அரசுத் தலைவர் தேர்தல் ஒன்றுக்கு தென்னிலங்கை முகம்கொடுக்கவுள்ள நிலையில்கூட தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்து சிங்கள அரசியல்வாதிகள் அக்கறையோ கவனமோ இன்றி இருக்கும் இந்த நிலமை மிக மோசமானது. இத்தகைய நிலையில்தான் சுதந்திர தினத்தைக் கரிநாளாக அறிவித்து பல்கலைக்கழக மாணவர்களும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் ஒரு போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றார்கள். இந்தப் போராட்டங்களும் வழக்கம்போல் ஏதோ சுதந்திர தினத்தில் ஒரு எதிர்ப்பைப் பதிவு செய்தோம் என்பதாக இல்லாமல் தீவிரமாக முன்னெடுக்கப்படவில்லை என்றால், அது தமிழர் அரசியலில் கனதியான தாக்கம் எதனையும் ஏற்படுத்தாது.

கட்சிகளின் தேர்தல்கால ஒற்றுமையைவிட இதுபோன்ற தருணங்களில் ஒன்றுபட்டுச் செயற்பட்டு அரசுக்கு அழுத்தங்களை வழங்குவதுதான் மிக முக்கியமான தேவை. அதற்காகவே கட்சிகளுக்கும் தமிழர் அமைப்புக்களுக்கும் அழுத்தம் கொடுக்கப்படவேண்டும்.

## இம்ரான் கான் அதிரடியான கிரிக்கெட் வீரர்

# அரசியல் விளையாட்டில் ஏன் ஆட்டமிழந்தார்?



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

(இம்ரான் கான் இளமைப் பருவத்தில் பல பெண்களுடன் உறவு நிலையினைக் கொண்டிருந்தமையால் பிளேபாய் என்று அறியப்பட்டார். அப்போது அவருக்கு ஏராளமான தோழிகள் இருந்தனர். பலர் வெளியில் தெரிய–ாவண்ணம் இருந்தனர்)

ஒரு வெற்றிகரமான கிரிக்கெட் வீரராக வலம் வந்து பல நாட்டு வீரர்களை தனது ஆட்டத்தால் கதி கலங்க வைத்த பாகிஸ்தான் வீரர்தான் இம்ரான் கான். இன்று தனது சொந்த நாட்டில் அரசியல் விளையாட்டில் ஆட்டம் இழந்து உள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரமதரான இம்ரான் கான், ஆளும் தரப்பிற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மிகப் பெரியளவில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர்.

யாரும் எதிர்பாராத வகையில் அவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். ஊழல் வழக்கு ஒன்றில் நீதிமன்ற வளாகத்திலேயே வைத்துக் கைது செய்யப்பட்டார். ஆயினும் பாகிஸ்தானில் அதிகரிக்கும் பணவீக்கம், பொருளாதார மந்தநிலைக்கு மத்தியில் இம்ரான் கானுக்கான ஆதரவு தொடர்ந்து அதிகரித்தே வருகிறது.

**இம்ரான் கான் ஆதரவு அலை:**

1996இல் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (பி.டி.ஐ) கட்சியைத் தொடங்கிய இம்ரான் கான், 20 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சியைப் பிடித்தார். கிரிக்கெட் உலகில் வீரனாகவும், பாகிஸ்தானில் அவர் பெரும் நட்சத்திரமாகவும் இருந்த போதிலும், அரசியலில் ஒரு ஆசனத்தை வெல்லவே அவர் 17 ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது.

2011தேர்தல் முதல் இம்ரான் கானுக்கு ஆதரவான அலை வீசத் தொடங்கியது. பாகிஸ்தானில் உள்ள படித்த இளைஞர்கள் இம்ரான் கானை ஆதரிக்கத் தொடங்கினர். பாகிஸ்தானை வலிமையான தேசமாக மாற்றுவதே தனது நோக்கம் என்று முழங்கினார்.

ஒக்ஸ்போர்டில் படித்த இம்ரான் கான் நியாசி (Imran Ahmed Khan Niazi -5/10/1952) என முழு பெயரைக்கொண்ட இம்ரான் கானை 1980 -90 கால கட்டத்தில் அவ்வளவு சுலபமாக மறந்துவிட முடியாது.

**கிரிக்கெட் வாழ்க்கை:**

கபில்தேவ், கவாஸ்கர், சச்சின், பிரைன் லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ் போல் அந்த காலத்திலேயே கிரிக்கெட்டில் ஒரு கலக்கு கலக்கியவர். சுமார் இருபது ஆண்டுகாலம் அதாவது 1971 முதல் 1992 வரை பாகிஸ்தான் அணிக்காக ஆடிய இம்ரான் கான் அந்த கால கட்டத்தில் ஒரு தலை சிறந்த வீரர்.

1992இல் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் உலகக் கோப்பை பெற்றுத் தந்த இம்ரான் கான் 2018 தேர்தலில் களமிறங்கினார். அனைவராலும் மதிக்கப்படும் ஊழலற்ற, வளமான தேசத்தைக் கட்டியெழுப்பப் போவதாகக் கூறி அவர் தேர்தலை எதிர்கொண்டார். இருப்பினும், அவரால் அதை முழுமையாகச் செய்ய முடியவில்லை.

1971ஆம் ஆண்டில் எட்ஜ்பஸ்டனில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் அறிமுகமான இவர், அதன் பிறகு கிரிக்கெட்டில் பல சாதனைகளை புரிந்தார். 1982 முதல் 1992 ஆம் ஆண்டு வரையில் பாகிஸ்தான் அணியின் கேப்டனாக இருந்த அவர், 1992 பாகிஸ்தானுக்கு உலகக் கோப்பையை வென்று கொடுத்தார். கிரிக்கெட் களத்தில் இவர் சீறும் சிங்கமாக வலம் வந்தவர்.

18ஆவது வயதில் பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பெற்று முதல் சர்வதேச போட்டியில் விளைய–ாடினார். ஒரு கதாநாயகனுக்கான தோற்றம் அனல் பறக்கும் வேகப்பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் அதிரடி என திகழ்ந்த இம்ரான் கான் பாகிஸ்தான் மக்களையும் தாண்டி உலகத்தையும் கவர்ந்தார். 1982ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் தலைவராக இம்ரான் கான் பொறுப்பேற்ற பிறகு பலம் வாய்ந்த அது அணியாக திகழ்ந்தது.

**அரசியலில் 17 ஆண்டு காத்திருப்பு:**

1992ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற போதும், பாகிஸ்தானின் தனிப்பெரும் நட்சத்திரமாக உயர்ந்த இம்ரான் கான், 1996ஆம் ஆண்டு பாகிஸ்தான் தெஹ்ரீக் இன்சாஃப் என்ற கட்சியை தொடங்கினார். பாகிஸ்தான் அரசியல் களத்தில் இம்ரான் கான் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்த போது முதல் தேர்தலில் அவரோடு சேர்ந்து அவரது கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. 2002ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுதேர்தலில்தான் இம்ரான் கான் எம்பியாகத் தேர்வானார்.

**இளமைப்பருவ பிளேபாய்:**

பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரமான லாகூரில் உள்ள ஒரு வசதியான குடும்பத்தில் சிவில் இன்ஜினியரின் மகனாக 1952இல் பிறந்தவர் இம்ரான் கான். செல்வம் காரணமாக அவருக்கு அப்போது சிறப்பான படிப்பு கிடைத்தது.

ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கு தத்துவம், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பட்டம் பெற்றார். கிரிகெட்டில் திறமை காட்டிய இம்ரான் கான், 1970களில் லண்டனில் பிளேபாயாக உருவெடுத்தார்

இவர் தனது இளமைப் பருவ வாழ்க்கையில் பல பெண்களுடன் உறவுநிலையினைக் கொண்டிருந்தார். இவர் பிளேபாய் என்று அறியப்பட்டார். இவரது இளமைப்பருவ வாழ்க்கையில் இவருக்கு ஏராளமான தோழிகள் இருந்தனர். பலர் வெளியில் தெரிய–ாவண்ணம் இருந்தனர்.

பிரித்தானிய செய்தித்தாளான 'தி டைம்ஸ்' இவர்களை 'மர்மமான அழகிகள்' என்று அழைத்தது. சீனத் அமான், எம்மா சார்ஜென்ட், சூசி முர்ரே–பிலிப்சன், சீதா வைட், சாரா கிராலி, ஸ்டீபனி பீச்சம், கோல்டி ஹான், கிறிஸ்டியன் பேக்கர், சுசன்னா கான்ஸ்டன்டைன், மேரி ஹெல்வின், கரோலின் கெல்லட், லிசா காம்ப்பெல், அனஸ்தேசியா குக், ஹன்னா மேரி ரோத்ஸ்சைல்ட், ஜெர்ரி ஹால் மற்றும் லுலு பிளாக்கர் ஆகியோர் இம்ரான் கானின் பட்டியலில் இடம்பெற்றிருந்தனர்.

**திருமண வாழ்க்கை :**

இங்கிலாந்தைச் சேர்ந்த யூதரான ஜெமீமா கோல்டுஸ்மித் என்பவரை மதம் மாற்றி, 1995இல் திருமணம் செய்து கொண்டார் இம்ரான் கான். இந்த உறவு மூலம் அவருக்கு சுலைமான், காசிம் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். இவர்களின் ஒன்பது வருட மணவாழ்வு மணமுறிவில் முடிந்தது.

இதன்பிறகு பி.பி.சியில் பணியாற்றிய பிரித்தானிய - பாகிஸ்தானிய வம்சாவளியில் பிறந்த ரேஹம் கான் என்பவரை இரகசிய திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமனம் ஒரு ஆண்டுக்குள்ளேயே மணமுறிவில் முடிந்தது. பின்னர் 2008 பெப்ரவரியில் தனது ஆன்மிக குரு என்று அதுவரை கூறிக் கொண்டிருந்த புஷ்ரா மணிகா என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

**பெரும் பின்னடைவு :**

2007ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் முாரப்பால் இம்ரான் கான் வீட்டு காவலில் வைக்கப்பட்டார். அவரது அரசியலுக்கு பல தடைகள் உருவாக்கப்பட்டன. தடைகளைத் தாண்டி புதிய பாகிஸ்தானைப் படைப்பேன் என்றார் இம்ரான்.

2013 பொதுத் தேர்தலில் இம்ரான் கான் கட்சி 2வது பெரிய கட்சியாக உருவெடுத்தது. இம்ரானின் வளர்ச்சியை தடுக்க அவருக்கு எதிராக அரசியல் அரங்கில் காய்கள் நகர்த்தப்பட்டன.

இம்ரான் கானின் தனிப்பட்ட வாழ்க்கையை

(9ஆம் பககம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# பம்பலப்பிட்டியில் திடீரென தீப்பற்றி எரிந்தது ஓட்டோ



கொழும்பு பம்பலப்பிட்டி காலி வீதியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றியுள்ளது. இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்தில் இருந்த பிரதேசவாசிகள் ஓட்டோவில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# விபத்தில் மனைவி உயிரிழந்தமையினால் தன் உயிரை மாய்க்க முயன்ற கணவன்

விபத்தில் தனது 20 வயதுடைய மனைவி உயிரிழந்த சோகத்தை தாங்கமுடியாத கணவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்வதற்காக நஞ்சை அருந்தியுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி இங்கிரிய பிரதேசத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் கணவனும் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கொழும்புதேசியவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மனைவி சிகிச்சைபலனின்றிஉயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த கணவன் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சைகளின்பின்னர்வெளியேறியுள்ளார்.

இந்நிலையில், தனது மனைவி உயிரிழந்த சோகத்தில் இருந்த கணவன் உயிரை மாயத்துக்கொள்வதற்காக நஞ்சருந்தியுள்ளார்.

அதன்பின்னர், அந்தநபர்இங்கிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பிரமிட் திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபா மோசடி

## சந்தேக நபர் கைது

பிரமிட் திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர். சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், மூன்று வருடங்களாக தலைமறைவாகியிருந்த நிலையில் பிலிமத்தலாவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் ஒரு பட்டதாரி என்பதுடன்ஆசிரியராககடமையாற்றியவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர் .

சந்தேக நபர் தொலைக்காட்சி நடிகை ஒருவருடன் முறையற்ற தொடர்பு வைத்திருந்தார் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சனத் நிஷாந்தவின் மெய்ப்பாதுகாவலரின் குடும்பத்துக்கு 15 லட்சம் ரூபா பண உதவி

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பாதுகாவலராகக் கடமையாற்றி விபத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அனுராதா ஜயக்கொடியின் குடும்பத்துக்கு 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்தப் பண நன்கொடையை வழங்கியுள்ளார்.

இதேவேளை, உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சார்ஜன்டாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்த மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் கான்ஸ்டபிள் அனுராதா ஜயக்கொடி ஆகியோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அவிசாவளையிலிருந்து திருமலைக்கு சுற்றுலா சென்ற வான் விபத்து

## 8 பேர் படுகாயம்



திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தங்கநகர் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பேர் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்; என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அவிசாவளையிலிருந்து திருகோணமலைக்கு வானில் சுற்றுலா சென்றவர்கள் சுற்றுலாவை முடித்துக் கொண்டு அதே வானில் திரும்பிச் சென்றுக்கொண்டிருந்த போது, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் ரக லொறியின் பின்புறத்தில் குறித்த வான் மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. இதன்போது வானில் பயணித்த அவிசாவளையைச் சேர்ந்த வான் சாரதி உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் ரக லொறியின் உதவியாளர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# நாரம்மலயில் இடம்பெற்றுள்ள ஓட்டோ விபத்தில் மூவர் இறப்பு

## ஒருவர் காயம்

நாரம்மல - கிரியுல்ல பிரதான வீதியின் கிவுல்கல்ல வளைவுக்கு அருகில் நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற வீதி விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த விபத்தில் காயமடைந்த நபர் ஒருவர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொள்கலனும் ஒட்டோவும் மோதியதாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் நால்வர் பயணித்த நிலையில் சம்பவ இடத்திலேயே மூவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்கலன்வண்டியின்சாரதிகைது செய்யப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



## காங்கேசன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா – இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த ஒக்டோபர் 14 தொடங்கப்பட்டது. ட கிழக்குபருவமழையின்காரணமாக, அது பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

## சனத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும்கலந்துகொண்டு தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.

## கிரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சைகளால் அப்போதைய விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க இலங்கை கிரிக்கெட்டை சபையை பதவி நீக்கம் செய்து புதிய இடைக்காலச் சபை ஒன்றை நியமித்தார். அதனை எதிர்த்து நீதிமன்றம் சென்ற இலங்கை கிரிக்கெட், அமைச்சரின் நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றம் சென்று தடை உத்தரவைப் பெற்றது.

இந்தச் சர்ச்சைகளை அடுத்து இலங்கை கிரிக்கெட்டுக்குத் தடை விதிப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்தது. அத்துடன் இந்த ஆண்டு இலங்கையில் நடக்க இருந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியையும் வேறு இடத்திற்கு மாற்றியது.

இதையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளையாட்டுத்துறை அமைச்சராகப் பதவி வகித்த ரொஷான் ரணசிங்கவைப் பதவி விலக்கிவிட்டு அவரது இடத்திற்கு ஹரீன் பெர்னான்டோவை நியமித்தார்.

புதிய அமைச்சரின் கீழ் சர்வதேச கிரிக்கெட் சபையுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களைத்தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருப்பதாகவே அமைச்சர் ஹரின் அறிவித்தார்.

## மேற்கத்தைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை ஜனாதிபதியும், பொதுஜன பெரமுனவினரும் நன்கு அறிவர்.

இந்நிலையில் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவற்றின் ஊடாக மக்கள் தகவல்களை தெரிந்து கொள்வதை தடுப்பதற்காக நிகழ்நிலைக் காப்புச்சட்டம் அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 13 திருத்தங்கள் குறித்த சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

அதனால்தான் அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி பரிசீலித்து அதன் பின்னரே கையெழுத்திடுவேன் என்று கூற வேண்டிய நிலைமை சபாநாயகருக்கு ஏற்பட்டுள்ளது. பேஸ்புக், கூகுள், வட்ஸ்அப் உள்ளிட்ட நிறுவனங்களும் இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. சட்டங்களின் ஊடாக இவற்றைக் கட்டுப்படுத்த தீர்மானித்தால், நாமும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம் என அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இங்கிலாந்தில் இவ்வாறான சட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு 4 ஆண்டுகள் ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இலங்கையில் அவ்வாறு ஏதேனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டனவா?

2001இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சட்டத்தை உடன் அமுலாகும் வகையில் நீக்கினார். ஆனால் இன்று அந்த ரணில் விக்கிரமசிங்க இல்லை. மேற்கத்தேய உடையணிந்த ராஜபக்சக்களின் கொள்கைவாதியாகவே இன்றைய ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார்.

இதற்கு உரிய பதிலை மக்கள் சரியான சந்தர்ப்பத்தில் - வழங்குவார்கள் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சிறீதரனின் ஐக்கிய அழைப்புக்கு விக்னேஸ்வரன் பச்சைக்கொடி

## ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமெனவும் தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு விடுத்துள்ள அழைப்பிற்கு தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் பச்சைக்கொடி காண்பித்துள்ளார்.

சிறீதரன் விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு –

சிவஞானம் சிறீதனுடன் இணைந்து இறுதியாக டெல்லிக்குச் சென்றபோது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது பற்றியும், அதற்காக அரசியல் பிரதிநிதிகளிடையே ஏற்படுத்தப்பட வேண்டிய இணக்கப்பாடுகள் தொடர்பிலும் நான் கலந்துரையாடல்களைச் செய்திருந்தேன்.

அதன்பின்னர் அவர் தமிழரசுக்கட்சியின் தலைமைக்கான போட்டியில் இறங்கியபோது, நான் பிறிதொரு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோதும், தமிழ்த் தேசியத்தையும், எமது மக்களுக்காகவும் குரல்கொடுக்கவல்லவராகவும், அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்லக்கூடிய ஆற்றல் உள்ளவராகவும் சிறீதரனை அடையாளம் காண்பதாக வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் மீள நினைவுபடுத்துவதற்கு விரும்புகின்றேன்.

அந்தவகையில், அவர் தமிழரசுக்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதற்கு எனது வாழ்த்துக்கள். அதேநேரம், சிறீதரனாலேயே அனைத்துத் தரப்பினையும் ஒருங்கிணைத்து தொடர்ந்தும் முன்னகர்ந்து செல்வதற்கான ஆற்றல் உள்ளது என்பதை நான் தற்போதும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நாளுக்கு நாள் நெருக்கடிகளை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றார்கள்.

குறிப்பாக ஆக்கிரமிப்பு, அடக்குமுறைப் பிரச்சினைகள் என்பனவற்றுக்கு அப்பால் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இருந்து பெருமளவானவர்கள் புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலைமைகள் மேலும் தீவிரமடைகின்றபோது, தமிழ்மக்களின் பிரதிநிதித்துவங்களில் இழப்புக்கள் ஏற்படும். அதுமட்டுமன்றி அவர்களுக்குச் சொந்தமான பூர்வீகமான நிலங்கள் பறிபோகும் நிலைமைகள் மேலும் தீவிரமடையும் ஆபத்துக்கள் உள்ளன.

ஆகவே, தமிழ் மக்களின் விடயங்களை முறையாக அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களும் ஒன்றிணைந்து முன்னெடுப்பதற்காக அவர்களை ஒருங்கிணைத்து ஒருமித்துச் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை அவர் முன்னெடுக்க வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்புக்களையும் எமது தரப்பில் வழங்கவுள்ளோம். - என்றார். (05)

## கிளிநொச்சியில் கஞ்சா கடத்தல்: 4 கிலோவுடன் ஒருவர் கைது

### இருவர் தப்பியோட்டம்

யுத்திய நடவடிக்கையின் போது வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் லொறியொன்றில் கடத்தி செல்லப்பட்ட 4 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லொறியொன்றில் கஞ்சா கடத்தி செல்லப்படுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இருவர் தப்பியோடியுள்ளனர்.

குறித்தவாகனத்தைசோதனையிட்ட போது சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட 4 கிலோ எடை கொண்ட இரு கஞ்சா பொதிகளை பொலிஸார் கைப்பற்றினர்.

குறித்தகஞ்சாபொதியையும், கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும், கைதானசந்தேகநபரையும்மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் .

தப்பி சென்ற இரு சந்தேக நபர்களையும் கைது செய்யும் நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (05)

## 26 நாள்களில் 6 பேரை பலிகொண்ட நெடுஞ்சாலைகளின் விபத்துக்கள்

இந்த வருடத்தின் கடந்த 26 நாள்களில் நெடுஞ்சாலைகளில் இடம்பெற்ற விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆனால், கடந்த ஆண்டு நெடுஞ்சாலைகளில் இடம்பெற்ற விபத்துகளில் 5 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர்.

நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும்போது பாதைகளில் வாகனங்களுக்கு இடையில் சரியான இடைவெளியைப் பேணாதமை பல விபத்துக்களை ஏற்படுத்துவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (05)

## ஹோட்டலில் பணி புரியும் பெண் ஊழியரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய இருவர் கைது



தம்புள்ளை பிரதேசத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் பணி புரியும் பெண் ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய ஹோட்டல் கணக்காளர் மற்றும் மனித வள முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர் அநுராதபுரம், மஹாவிலச்சிய பிரதேசத்தை சேர்ந்த பெண்ணாவார்.

குறித்த தனியார் ஹோட்டலில் பணியாற்றி வரும் இந்த பெண் ஊழியரின் சேவைக் கட்டணத்தை 75 வீதமாக வழங்குவதற்காகவும் சேவையை நிரந்தரமாக்குவதற்கும் ஹோட்டல் கணக்காளர் மற்றும் மனித வள முகாமையாளர் ஆகியோர் இப்பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கோரியுள்ளனர்.

அதனையடுத்து, சந்தேக நபர்கள் இந்த பெண்ணை ஹோட்டல் அறையொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர்.

அதன்பின்னர், பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபர்கள் ஹபரனை பிரதேசத்தில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

## நுவரெலியா வாவியில் ஆணின் சடலம் மீட்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் உள்ள கிரகரி வாவியில் நேற்று (சனிக்கிழமை) காலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிரகரி வாவியில் படகு சவாரியில் ஈடுபடுவோர் சடலமொன்று மிதப்பதாகப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

அதனையடுத்து, வாவியில் மிதந்த சடலத்தை பார்வையிட்ட பொலிஸார், 64 வயதுடைய இராமன் பத்மநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, நுவரெலியா மாவட்ட நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதையடுத்து, சடலம் வாவியில் இருந்து மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வாவியில் பாய்ந்து உயிரிழந்தாரா....? அல்லது எவராவது கொலை செய்து வாவியில் எறிந்துவிட்டுச் சென்றார்களா என்பது தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரணவிசாரணைகளின்பின்னர், சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

## சந்தேகத்திற்கிடமாக மூதாட்டி உயிரிழப்பு

சுயநினைவை இழந்த மூதாட்டியொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் காலி, கரந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய பெண்ணாவார்.

இவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் தனது வீட்டில் சுய நினைவின்றி தரையில் வீழ்ந்து கிடந்த நிலையில் பிரதேசவாசிகளின் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த இவர் 4 நாள்களுக்கு பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் இவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## மனைவியை தாக்கி மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்த கணவருக்கு தூக்குத் தண்டனை



தனது மனைவியைத் தாக்கி மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டு கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கணவர் குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து மரண தண்டனை விதித்து குளியாப்பிட்டி மேல் நீதிமன்றம் தீரப்பளித்துள்ளது.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த நபருக்கே இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி தனது மனைவியைத் தாக்கி அறையொன்றில் வைத்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொலை செய்த் சம்வம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். (05)

## மயங்கி விழுந்த நிலையில் இளைஞன் திடீர் உயிரிழப்பு

*காய்ச்சலும், வாந்தியும் ஏற்பட்ட நிலையில் திடீரென மயங்கி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் ஒருவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -*

*குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் -கீரிமலை பகுதியில் தங்கி இருந்து வேலை செய்து வந்துள்ளார்.*

*இந்நிலையில் அவருக்கு காய்ச்சல் மற்றும் வாந்தி ஏற்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.*

*அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.*

*அவரது மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (05)*

## 10 வயது சிறுமிக்கு ஆபாச படங்களை காண்பித்து பாலியல் துஷ்பிரயோகம்

### இளைஞன் கைது

கடுவெல பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 10 வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 20 வயதுடைய இளைஞராவார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாய் மற்றும் சகோதரியுடன் வழிபாட்டுக்காக விகாரைக்குச் சென்றுள்ளார்.

அவ்வேளை, சந்தேக நபர் மத வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சிறுமியிடம் தனது கையடக்கத் தொலைபேசியில் இருந்த ஆபாச படங்களை காண்பித்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி சத்தமிட்டுக்கொண்டு தனது தாயிடம் சென்றபோது, சந்தேக நபர் வானொன்றில் ஏறி தப்பிச்சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஆபாசபடங்களை காண்பித்ததாகக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசியுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடுவெல பொலிஸார் தெரிவித்தனர். (05)

## போதைப்பொருளை அழிக்க நடவடிக்கை

பாதுகாப்பு தரப்பினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களை அழிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மார்ச் மாத இறுதிக்குள் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வண்ணாத்தவில்லு பிரதேசத்தில் போதைப்பொருள் அழிக்கும் வசதியுடன் கூடிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# முஸ்லிம் விரோதப் போக்கு தற்போதைய ஆட்சியிலும்

## இம்ரான் எம்.பி. சாடல்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியின் கீழ் முஸ்லிம் விரோதப் போக்கு தொடர்ந்துவருவதாகதிருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் குற்றஞ் சாட்டியுள்ளார். சமீபத்தில் இடம்பெற்ற கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர் மாற்றத்தின் மூலம் இது உறுதிப் படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் உள்ள 5 அமைச்சுக்களின் செயலாளர்களுள் இருவர் முஸ்லிம் உத்தியோகத்தர்களாகவும், இருவர் தமிழ் உத்தியோகத்தர்களாகவும், ஒருவர் சிங்கள உத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். கிழக்கு மாகாண இனச்சமநிலையைக் கருத்தில் கொண்டு இந்த நியமனம் இடம் பெற்றிருந்தது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர் நியமனத்தில் தகுதியுள்ளோர் இருந்தும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் ஓரங்கட்டப்பட்டனர். இரு முஸ்லிம் செயலாளர்கள் பணியாற்ற வேண்டிய தருணத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் மாத்திரம் ஒரு முஸ்லிம் உத்தியோகத்தர் செயலாளராகப் பணியாற்றினார்.

சமீபத்தில் அவரும் காரணமேதுமின்றி அப்பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ளார். தற்போது கிழக்கு மாகாணத்தின் 5 அமைச்சுக்களிலும் எந்த ஓர் அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர் இல்லை.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் உள்ள பொதுச் சேவை ஆணைக்குழு, வீடமைப்பு அதிகாரசபை, சுற்றுலா அதிகாரசபை, போக்குவரத்து அதிகாரசபை, முன்பள்ளிப் பணியகம், கூட்டுறவு ஆணைக்குழு ஆகியவற்றின் தவிசாளர்களுள் சிலவற்றுக்கு முஸ்லிம் தவிசாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் இவற்றில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளர்களும் நியமிக்கப்படவில்லை. முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டனர். இது தொடர்பாக ஏற்கனவே நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

தற்போது அந்த வரிசையில் அமைச்சுச் செயலாளர்கள் பதவியிலிருந்தும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் அகற்றப் பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக்கட்சி முஸ்லிம் விரோதப் போக்குடன் செயற்பட்டுவருகின்றது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாகாணம் கிழக்கு மாகாணமாகும். இந்த மாகாணத்திலேயே முஸ்லிம்களுக்கு இந்த நிலையென்றால் ஏனைய மாகாண முஸ்லிம்களும் இது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பதவியில் நீடித்து இருப்பாராயின் சகல முஸ்லிம்களும் ஓரங்கட்டப்பட்டு விடுவர் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

கிழக்கு மாகாண நிர்வாகத்தில் இப்படிப் பல முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் முஸ்லிம்களின் உரிமைகளை வென்று தருவோம் என்று கோசம் எழுப்பி வாக்குப் பெற்ற ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் மூடி மௌனமாக இருப்பது எனக்கு கவலையைத் தருகின்றது. இது முஸ்லிம்களது உரிமை சார்ந்த விடயம் இல்லையா என்று கேட்க வேண்டியுள்ளது. - என்றார்.

(05)

# சம அந்தஸ்தை எமக்கும் வழங்குக

## ரெலோ சிறிதரனிடம் கோரிக்கை



தமிழ் மக்களுக்காக அரசியல் கட்சிகளிடையே ஏற்படுகின்ற ஐக்கியமானது, அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு சம அந்தஸ்தை வழங்குவதாக இருப்பது மிகவும் முக்கியமானது. குறிப்பாக கூட்டமைப்பின் ஜனநாயகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு ரெலோ தலைவரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிஶ்ரீவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரெலோவைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உருவாக்கத்தின் போதே அதன் ஆரம்பக் கட்சிகளில் ஒன்றாகப் பங்கெடுத்திருந்தது. அன்றுமுதலே நாம் ஐக்கியத்துக்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆனால், தமிழ் மக்களுக்காக அரசியல் கட்சிகளிடையே ஏற்படுகின்ற ஐக்கியமானது, அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு சம அந்தஸ்தை வழங்குவதாக இருப்பது மிகவும் முக்கியமானது. குறிப்பாக கூட்டமைப்பின் ஜனநாயகத்தன்மை, மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்வதாக இருக்க வேண்டும்.

ஆகவே, தான் கடந்த காலத்தில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அதற்கு ஒருபொதுவானசின்னம் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம்.

தற்போதும் அவ்விதமான நிலைப்பாட்டியேலே உள்ளோம். எம்மைப்பொறுத்தவரையில், அரசியல் கட்சிகளிடையே தேர்தல்கால ஐக்கியத்தைவிடவும் வலுவான தமிழ்மக்களின் அரசியல் கட்டமைப்பாக இருக்க வேண்டுமாயின் ஆகக்குறைந்தது மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதே பொருத்தமானது.

இலங்கைத்தமிழரசுக்கட்சி, தனது வீட்டுச்சின்னத்தை விட்டுக்கொடுப்பதற்கு தயாரில்லாத மனநிலையைக் கொண்டிருக்குமாயின் அத்தரப்பினர் அதனை பொதுச்சின்னமாக ஏற்றுக் கொள்வதற்காகவாவது நெகிழ்வுத்தன்மையுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

இந்நிலையில், புதிய தலைவரின் அழைப்பினை நாம் சாதகமாக பார்க்கும் அதேநேரம், இந்தவிடயங்களை உள்வாங்கி நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது நாம் கலந்துரையாடுவதற்கு தயாராகவே உள்ளோம். - என்றார்.

(05)

# கொழும்புத் துறைமுகத்தில் அழுகிய மீன்களுடன் கப்பல்

சீஷெல்ஸில் இருந்து தாய்லாந்து நோக்கி பயணித்த கப்பலில் 98 கொள்கலன்கள் அடங்கிய கழிவு மீன்கள் கொழும்பு துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாக அரசாங்க கணக்கு குழுவில் தெரிய வந்துள்ளது.

இந்தக்கப்பலில் கொண்டுவரப்பட்ட கழிவு மீன்கள் இயற்கை உரங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதாக கூறி இங்கு தரையிறக்கப்பட்டுள்ளன.

கப்பலை இலங்கைக்கு கொண்டு வந்த இலங்கை பிரதிநிதிக்கு சொந்தமான செம்மண் தொழிற்சாலை உள்ளதாகவும், கழிவு மீன்கள் அடங்கிய 4 கொள்கலன்களுக்கு என்ன நடந்தது என தெரியவரவில்லை எனவும் அந்த குழுவில் மேலும் தெரிய வந்துள்ளது.

இந்த கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மீன் கழிவுகளுக்காகவே இந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள தாகவும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப் பாட்டாளர் நாயகம் பிரேமதிலக மஹத்மோயா தெரிவித்தார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என அரச கணக்குகள் தொடர்பான குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

(05)

# தம்பாளை விபத்தில் 17 வயது சிறுவன்சாவு

லொறி – மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவமொன்று தம்பாளையில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தம்பாளை - றிபாய் புர உள்ளக காபர்ட் வீதியில் சனிக்கிழமை இடம்பெற்றது. குறித்த வீதியால் சிறுவன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தை ஏற்படுத்திய லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புலஸ்திபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தம்பாளை வேப்பம் புரயில் வசித்து வந்த 17 வயதுடைய சிறுவனே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# எந்தத் தரப்பும் ஏகபோகம் காட்டக்கூடாது சிறிதரனின் அழைப்புக்கு சித்தர் நிபந்தனை



இலங்கைத் தமிழரசுக்கட்சி மீண்டும், ஐக்கியத்தினை ஏற்படுத்துவதற்கு, எந்தவொரு தரப்பினரும் ஏகபோகத்தை செய்யாதவகையில் அங்கீகரம் பெற்ற அரசியல்கூட்டொன்றையும், பொதுச்சின்னத்தையும் ஏற்றுக் கொள்வதே பொருத்தமானதாகும்.

புளொட் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறு சிறிதரனின் அழைப்புக்கு நிபந்தனை விதித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற, ஒரேகொள்கையில் பயணிக்கின்ற தரப்பினர்கள் ஐக்கியப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

எம்மைப்பொறுத்தவரையில் நாம், ஐக்கியத்தினை ஒருபோதும் எதிர்த்த தரப்பினர் கிடையாது. ஆனால் அவ்வாறு ஐக்கியப் படுகின்ற போது கடந்த காலத்தில் நிகழ்ந்தேறிய சில முக்கிய விடயங்களை கவனத்தில் கொண்டு நாம் ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம்.

முதலாவதாக, இலங்கைத் தமிழரசுக்கட்சியே கடந்த உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தல் அறிவிக் கப்பட்ட போது, தனித் துப்போட்டியிடுவதாகக் கூறி வெளியேறியது.

அதன்பின்னர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் எஞ்சிய தரப்பாக நாமும், ரெலோவும் இருந்ததோடு ஏனைய தரப்பினரையும் கூட்டமைப்புக்குள் இணைத்து செயற்படுவதற்குத் தீர்மானித்தோம்.

அதனடிப்படையில், தேர்தல் விடயங்களை கையாள்வதற்காக நாம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்கின்ற பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சியையும், அதன் சின்னத்தையும் பொதுவானதாகப் பேணிவருகின்றோம்.

அந்த வகையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி மீண்டும், ஐக்கியத்தினை ஏற்படுத்துவதற்கு, எந்தவொரு தரப்பினரும் ஏகபோகத்தை செய்யாதவகையில் அங்கீகரம் பெற்ற அரசியல் கூட்டொன்றையும், பொதுச்சின்னத்தையும் ஏற்றுக்கொள்வதே பொருத்தமானதாகும்.

இந்த விடயத்தில் இணக்கப்பாடுகளை எட்டுகின்றபோது, தமிழரசுக்கட்சி உள்ளடங்கலான அரசியல் கட்சிகளிடையே ஏற்படுகின்ற கூட்டு அர்த்தமுள்ளதாக அமையும். - என்றார்.

(05)

# சனத் நிசாந்தவின் உயிரைப் பறித்த வாகன விபத்து மூன்றாவது வாகனம் குறித்துப் பொலிஸார் விசாரணை

இராஜாங்க அமைச்சர் சனத்நிசாந்தவின் உயிரைப் பறித்த வாகன விபத்தில் தொடர்புபட்டிருக்கக் கூடிய மற்றுமொரு வாகனம் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன.

மூன்றாவது வாகனமொன்று விபத்து இடம்பெற்றவேளை காணப்பட்டது என விபத்தில் சிக்கிய இரண்டு வாகனங்களின் சாரதிகளும் தெரிவித்துள்ளதால் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் வாகனச் சாரதியும் கொள்கலன் சாரதியும் அதிகவேகமாக வாகனத்தைச் செலுத்தியமை கவனம் இன்மை அப்பகுதியில் வீதி விளக்குகள் ஒளிராமை உட்பட பல காரணங்களால் விபத்து இடம்பெற்றது எனத் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது வாகனமொன்று வழிவிட மறுத்தது எனவும் அவர்கள் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இராஜாங்க அமைச்சர் மிகவும் மும்முரமாகக் காணப்பட்டார். அவரது வாகனச்சாரதி ஆறுமணித்தியாலங்களுக்கு மேல் வாகனத்தைத் தொடர்ச்சியாகச் செலுத்தியிருந்தார் இதுவும் விபத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

அமைச்சர் நாடாளுமன்ற அமர்வுகளின் பின்னர் அவுஸ்திரேலிய தினநிகழ்வுகளில் கலந்துகொண்டார் பின்னர் குருநாகலிற்கு சென்றுள்ளார் அங்கிருந்து ஆராச்சிக்கட்டுவ சென்றுள்ளார் அதன்பின்னர் அவர்கள் கொழும்பு திரும்பிக்கொண்டிருந்தவேளையே விபத்து இடம்பெற்றுள்ளது.

ஜீப் அதிவேகத்தில் பயணித்துள்ளது.

பிணையில் விடுதலை செய்யப்பட்ட கொள்கலன் சாரதி இராஜாங்க அமைச்சரின் ஜீப் கார் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்டதை அவதானித்ததாக தெரிவித்துள்ளார்.

இரண்டுகார்களும் மிகவேகமாக செல்வதை அவதானித்து தனது வாகனத்தை இடதுபக்கம் செலுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தான் முன்னே இடதுகைபக்கத்தில் சென்றுகொண்டிருந்த வாகனத்தை கடந்து செல்ல முற்பட்டவேளை நான் முன்னே கொள்கலன் ஒன்றை அவதானித்தேன் ஆனால் எனது வாகனம் சமாந்திரமாக பயணித்துக்கொண்டிருந்த மற்றுமொரு வாகனத்துடன் மோதும் என அஞ்சியதால் என்னால் வாகனத்தை வலதுகைபக்கம் கொண்டு செல்லவில்லை இதன் காரணமாக கொள்கலனுடன் மோதநேர்ந்தது என சனத்நிசாந்தவின் வாகனச்சாரதி தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசியல் விளையாட்டில்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)குறிவைத்து இம்ரான் தனது மதகுருவையே மூன்றாவது மனைவியாக திருமணம் செய்து கொண்டார் என்ற குற்றச்சாட்டை முன் வைத்தனர். இது இம்ரான் கானுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

**பாகிஸ்தானின் பிரதமர் :**

பின்னர் பாகிஸ்தானின் பிரதமராக இருந்த நவாஷ் ஷெரீப் ஊழல் வழக்கில் சிக்கி உச்ச நீதிமன்றத்தால் தனது பதவியை இழக்க, ஆளும் கட்சி மீது மக்களிடையே அதிருப்தி எழுந்தது அதை அறுவடை செய்யும் முயற்சிகளில் இறங்கினார் இம்ரான்.

ஊழலில்லா பாகிஸ்தான் என்ற முழக்கத்தோடு தேர்தலில் களமிறங்கிய இம்ரான் கானை மக்களும் ஏற்றுக் கொண்டனர். ஏறத்தாழ தனிப் பெரும்பான்மையுடன் பாகிஸ்தானின் 19ஆவது பிரதமராக இம்ரான் கான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இம்ரானின் தவறான அரசியல் பொருளாதாரம் மற்றும் ஆயலுறவுக் கொளைகளால் பாகிஸ்தான் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வருவதாகவும், விலைவாசி கிடுகிடுவென உயர்ந்ததால் அந்நாட்டு மக்கள் துயரங்களை சந்தித்து வருகின்றனர் என்ற அஸ்திரத்தை எதிர்க் கட்சிகள் கையில் எடுத்தன. இதனை தடுப்பதற்காக எவ்வித முயற்சிகளையும் செய்யாத இம்ரான்கான் மீது இது தொடர்பாக குற்றம் சாட்டி எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கோரினர்.

**களத்தில் உறுதி:**

சொந்த கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிராகத் திரும்பியதால் இம்ரானின் நிலைமை கேள்விக்குறியானது. பாகிஸ்தான் வரலாற்றில் எந்த பிரதமரும் முழுமையாக ஆட்சியில் இருந்தது இல்லை என்ற வரலாறு மீண்டும் திரும்புமா என எதிர் பார்க்கப்பட்ட நிலையில், 'கடைசி பந்து வரை அடித்து ஆடுவேன்' என உறுதியாக நின்றார் இம்ரான் கான்.

**உலக அளவில் எதிர்பார்ப்பு :**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்த நிலையில் பாகிஸ்தான் அரசியலில் திடீர் திருப்பமாக , இம்ரான் கான் பாகிஸ்தான் பிரதமராக இல்லை என பாகிஸ்தான் அமைச்சரவை செயலாளர் அறிவித்தார். இதனால் பதவியை இழந்தார் இம்ரான் கான். கிரிக்கெட்டைப் போல் அரசியலில் அடித்து ஆடுவாரா இம்ரான் கான் என்ற எதிர்பார்ப்பு உலக அரங்கில் எழுந்தது.

**மீண்டும் வரும் இம்ரான் கான்:**

சில ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானின் அதி வலுவுள்ள தலைவராக இருந்த இம்ரான் கான், சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஆட்சியை இழக்க நேரிட்டது. இப்போது சிறையில் உள்ள அவருக்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வரும் நிலையில், மீண்டும் அவர் ஆட்சியை கைப்பற்றுவாரா என்பது சந்தேகமே.

# சர்வதேச ஈர நில தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இயற்கை நடைபயணம்

சர்வதேச ஈர நில தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவருக்கான களப்பயணம் ஒன்று இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலர் ம.சசிகரனின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகமும் சிறகுகள் அமையமும் இணைந்து யாழ். செம்மணி பகுதியில் அமைந்துள்ள ஈரநிலப் பிரதேசத்துக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு அவர்கள் ஈரநிலத்தில் வாழும் சிற்றுயிர்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் என்பவற்றை அவதானிக்க புலமை மிக்க வளவாளர்களால் வழிகாட்டப்பட்டனர். இங்கு மாணவர்களுக்கு ஈர நிலங்களின் முக்கியத்துவம், ஈர நிலங்கள் பாதுகாக்கப்படுவதில் ஒவ்வொரு தனி மனிதனதும் பங்களிப்பு என்பன எடுத்துக்கூறப்பட்டது.

இந்த ஈரநிலத்துக்கான இயற்கை நடைபயணத்தில் மாணவர்கள் மட்டுமன்றி சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் வயது வேறுபாடின்றி ஆர்வத்தோடு பங்கேற்றனர்.

(05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2024இல் வெளியிடப்பெற்றது.